**காலி மரபுரிமை மன்றம் - 2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

காலி மரபுரிமை மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலி மரபுரிமை மன்றத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான விதத்தில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, காலி மரபுரிமை மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது காலி மரபுரிமை மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் காலி மரபுரிமை மன்றத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

காலி மரபுரிமை மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளும் பொறுப்பு, அப் பொறுப்பு ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக காலி மரபுரிமை மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது காலி உரிமை மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், செயற்படு முறை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், செயற்படுமுறை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது காலி மரபுரிமை மன்றத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க காலி மரபுரிமை மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 மற்றும் 1981 ஒக்தோபர் 16 திகதிய 07 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 06 | பணம் அல்லது இருப்பு தொடர்பாக செயற்படுவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்கினாலும் பிணை வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் காலி மரபுரிமை மன்றத்தின் கணக்காளர், கண்காட்சிக் கூடங்களின் மற்றும் தகவல் | மேற்கூறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைப்புத் தொகையை தடுத்து வைப்பதற்காக செயற்படுகின்றேன் என கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | குறிப்பிட்ட சட்டங்கள் பிரமாணங்களின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்க ளிடம் இருந்து வைப்புத் தொகையை தடுத்து வைப்பதற்காக |

| | | |
|---|---|---|
| நிலையங்களில் இருக்கும் உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,411,764 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 584,118 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 1,995,882 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,442,667 இற்கான வாடகை வருமானம் ஒன்று கிடைக்கப் பெறல் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 1,267,780 இனால் அதிகரித்தல் முக்கியமாக காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் தொழிலாளர் மேற்பார்வையாளரின் விடுதியாக பயன்படுத்தப்பட்டிருந்த கட்டிடம் ஒன்று 2018 ஆண்டு வரை பொலிஸ் உத்தியோகபூர்வ வாசஸ்தளமாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், வாணிப அலுவல்களுக்காக ஈடுபடுத்தும் குறிக்கோளுடன் காலி மரபுரிமை மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 23 கணக்காய்வுத் திகதி அளவிலும் அந்த குறிக்கோளினை நிறைவேற்றிக் கொண்டிருக்கவில்லை. | 2023 முதல் காலாண்டின் போது கட்டிடத்தின் பாதுகாத்தல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் மாதம் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு மே மாதம் முதல் பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு கட்டிடத்தை ஒப்படைப்பதற்காக எதிர்பார்க்கின்றேன். மே மாதம் முதல் கட்டிடத்தின் மூலம் வருமானம் பெற முடியும். | கட்டிடத்தை வாணிப அலுவல்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காலி மரபுரிமை மன்றத்திற்கு, மிகை அதிகாரம் பெற்றுக்கொள்வதற்காக மற்றும் வருமானம் உருவாக்கும் சந்தர்ப்பங்களை மேம்படுத்தும் குறிக்கோளுடன் 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் தேவையினை இனங் கண்டிருந்தது. அதற்காக 2015 ஆண்டின் போது அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி | தற்போது இந்த சட்டத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சட்டத்தை விரைவாக திருத்திக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவிலும் சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நுழைவுச் சீட்டு விற்பனை செய்து வருமானம் உழைப்பதன் மூலம் சுற்றுலா பார்வை இடம் ஒன்றான ‘கறுப்புக் கோட்டை’ காலி பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளமையால் பார்வை இடத்திற்கு நுழையும் பாதை நிதமும் படலை ஒன்றினால் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. அதன்படி, இந்த சுற்றுலா இடத்தின் மூலம் காலி மரபுரிமை மன்றத்திற்கு போதிய வருமானம் ஒன்றினை உருவாக்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு பொறுத்தப்பட்டிருந்த அறிவுருத்தல் பலகையின் மூலம் இலகுவாக அனைத்து இடங்களையும் இனங் காணக்கூடியவாறு தயாரிக்கப்பட்டிருந்தது. கறுப்புக் கோட்டையில் பிரதி பொலிஸ் மா அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் மற்றும் அலுவலகம் அமைந்துள்ளமையால் பாதுகாப்புக்காக படலை ஒன்று பொறுத்தப்பட்டுள்ளது. எனினும், கறுப்புக் கோட்டையின் காட்சிக் கூடங்களை சுற்றுலா பிரயாணிகள் பார்வையிடுவதில் பாதகம் ஏதும் இல்லை. அனேக சந்தர்ப்பங்களில் சந்திர கெலரி அல்லது நட்டத்திர கெலரியில் இருந்து பொதுவான நுழைவுப்பத்திரம் பெற்று சுற்றுலாப் பிரயாணிகள் கறுப்புக் கோட்டையை பார்வையிடுகின்றனர். | காட்சி இடங்களுக்கு சுற்றுலாப் பிரயாணிகள் தடை ஏதும் இன்றி வசதியாக நுழையக்கூடிய விதமாக பாதை தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காலி மரபுரிமை மற்றத்தின் மூன்றாம் தர மட்டத்தின் 02 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் கடவத் சதர பிரதேச செயலகத்தினால் சம்பளம் பெறும் 06 உத்தியோகத்தர்களும், புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சிலிருந்து சம்பளம் பெறும் 02 உத்தியோகத்தர்களும், அக்மீமன பிரதேச செயலகத்திலிருந்து சம்பளம் | தேசிய மரபுரிமை, அருங்கலை மற்றும் கிராமிய சிற்பக் கலை மேம்படுத்தல் அலுவல்கள் இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் NH/Secretary/01 மற்றும் 2021.01.20 திகதிய கடிதத்தின் பிரகாரம் வெற்றிடப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவிகளை முறைப் பிரகாரம் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

பெறும் 02 உத்தியோகத்தர்களும் மிகை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டும். மீளாய்வாண்டிற்காக காலி மரபுரிமை மன்றத்தினால் தமது விடயப் பரப்பின் கீழ் காணப்படும் விடயங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்திருந்த போதிலும், ஒரு நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தவிர காலிக் கோட்டையை பாதுகாப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் கவர்ச்சி ஊடாக விதமாக மேலும் கவனம் செலுத்தக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங் கண்டிருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது காலி மரபுரிமை மன்றத்தினால் செயற்படுத்தப்பட்ட ஒரேயொரு செயற்திட்டம் பழமைவாய்ந்த கட்டிடம் ஒன்றான பழைய பொலிஸ் உத்தியோகபூர்வ வாசஸ்தள கட்டிடத்தை பாதுகாத்து இலங்கைக்கு உள்ளார்ந்த உள்நாட்டு கைத்தொழிலாளர்கள், உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் பிரதேச பொருளாதாரத்தை வலுப்படுத்தி காலி மரபுரிமை மன்றத்தின் முக்கிய வருமான வழியொன்று ஏற்படுத்துவதாகும். அதன்படி, நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் 8.9 இனை நெருங்கியிருந்ததென அறிவிக்கின்றேன். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் 8.9 இற்காக மாத்திரம் கவனம் செலுத்தியிருந்த போதிலும் மேலும் கவனம் செலுத்தக் கூடிய துறைகளை இனங்கண்டிருப்பதனால் அந்தத் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை நோக்கி நெருங்கக் கூடியவாறு முடியுமான வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |